**OS.No. 202/2023**

Date : 27.07.2026

Witness Name & Rank - சிரிதா - PW1

**சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டது**

1. மேற்படி நாங்கள் அனுபவத்தில் இருந்த காலை எண். 714/1A1 பூமியில் உட்பிரிவு செய்யப்பட்ட போது தான் 22 செண்ட் குறைவாக இருந்தது தெரியவந்தது என்றால் சரியல்ல, மேற்படி காலையில் 1.56 ½ இருந்தது அது உட்பிரிவு செய்யப்பட்ட போது காலை எண். 714/1A1 ல் 1.34 ஏக்கர் என்றும் தனியாக 714/1A2 வில் 22 செண்ட் என்றும் செய்யப்பட்டது. மேற்படி உட்பிரிவு எப்போது செய்யப்பட்டது என்றால் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிய பிறகு 2023 ல் செய்யப்பட்டது. ஒரே நாளில் தான் எனக்கும் பிரதிவாதிகளுக்கும் செட்டில்மெண்ட் பத்திரப்படி உட்பிரிவுசெய்யப்பட்டது என்றால் இல்லை, முதலில் நான் தான் மனு தாக்கல் செய்தேன் எங்களுக்கு மட்டும் உட்பிரிவு செய்யப்பட்டது பிரதிவாதிகளை பற்றி தெரியாது.
2. மேற்படி உட்பிரிவு செய்யப்பட்ட போது காலை எண். 714/1A1 ல் 1.34 லும் 714/1A2 ல் 1.62 ம் இருந்தது என்றால் அப்போது அளந்த போது எனக்கு அதன் விஸ்தீரணம் சொல்லவில்லை பிறகு சிட்டா வந்த போது தான் 714/1A2 ல் சுமார் 1.80 போல் சொன்னார்கள். எனது தந்தைக்கு 714/1A காலையில் பாகப்பிரிவினைப்படி 3.40 ஏக்கர் கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். மேற்படி காலை 714/1A பூமியில் நானும் எனது தாயாரும் அனுபவத்தில் உள்ள சொத்தை அளந்து பார்த்த போது 3.40 இல்லாமல் வெறும் 2.96 ஏக்கர் தான் இருந்தது என்றால் எனக்கு அது தெரியாது, 1.56 ½ நிலம் தருவதாக சொன்னார்கள். அதே போல் 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் சொத்துக்களை அளந்து பார்த்த போது 2 ம் பிரதிவாதிக்கு 19 செண்டும் 3 ம் பிரதிவாதிக்கு 4 செண்டும் குறைவாக இருந்தது என்றால் இல்லை. உட்பிரிவு செய்யப்பட்ட போது தாயார் அனுபவத்தில் 1.62 தான் இருந்தது என்றால் இல்லை.
3. மேற்படி எனக்கும் பிரதிவாதிகளுக்கும் செட்டில்மெண்ட் எழுதிக்கொண்ட பிறகு அளந்து பார்த்த நிலையில் அனைவருக்கும் சேர்த்து மொத்த சொத்தில் 67 செண்ட் குறைவாக இருந்தது என்றால் சரியல்ல. மேற்படி எப்போது

உட்பிரிவு செய்வதற்கு மனு தாக்கல் செய்யப்பட்டது என்பதை காட்ட அதன் மனு நகல் அல்லது அளந்ததற்கான வரைபடம் ஏதேனும் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி சொத்தில் எனது தந்தைக்கு கிடைத்த பாகப்பிரிவினை அடிப்படையாக கொண்டு சொத்துக்களை முறையாக அளந்து பார்க்காமல் செட்டில்மெண்ட ஆவணங்கள் எழுதப்பட்டு அதன் பிறகு அனைத்து தரப்பினர்களும் சொத்துக்களை உட்பிரிவு செய்வதற்காக அளந்த போது மொத்த சொத்தில் 67 செண்ட் அனைவருக்கும் குறைவாக இருந்த நிலையில் மீண்டும் பரமேஸ்வரன், தங்கவேல், வெங்காடாச்சலம் ஆகியோரை வைத்து பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் இல்லை. அவ்வாறு பேசப்பட்டு அவரவர் அனுபவத்தில் உள்ள பூமியை வைத்துக்கொண்டு ஆவணத்தில் உள்ள இதர விஸ்தீரணத்தை விலக்கி கொள்ள முடிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

4. அவ்வாறு அதை ஒட்டி மீண்டும் செட்டில்மெண்ட் பிழைத்திருத்தல் பத்திரம் எழுதிக்கொள்ள அனைவரும் சம்மதித்தோம் என்றால் சரியல்ல. அதை தொடர்ச்சியாக தான் உட்பிரிவு செய்யப்பட்டு எனக்கு 1.34 714/1A1 ல் ஒதுக்கப்பட்டது என்றால் இல்லை. அதே போல் தான் எனது அம்மாவிற்கு 714/1A2 ல் 1.62 பூமி ஒதுக்கப்பட்டது என்றால் இல்லை. மேற்படி 714/1A வில் எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் மட்டும் நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். 714/1A பூமியில் 44 செண்ட் குறைவாக உள்ளது எந்த உட்பிரிவு உள்ளது என்றால் குறைவாக இல்லை. இந்த வழக்கில் த 714/1A வில் 3.40 ஏக்கர் உள்ளை காட்ட ஏதேனும் நீதிமன்ற ஆணையர் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. நான் சொன்னது போல் எனது சுவாதீனத்தில் 1.56 ½ ஏக்கர் இல்லை என்றால் சரியல்ல. 1.34 ஏக்கர் தான் எனது சுவாதீனத்தில் உள்ளது என்றால் சரியல்ல. 1.62 ஏக்கர் எனது தாயார் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. அந்த 1.62 தான் 714/1A2 என்றால் சரியல்ல. அவ்வாறு 1.62 ஏக்கர் பூமியை எனது தாயார் அனுபவித்து வந்து 09.02.2024ம் தேதி 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு தனித்தனியாக செட்டில்மெண்ட் எழுதிவைத்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு செடடில்மெண்ட் எழுதிவைத்ததை வைத்து விரோதம் கொண்டு நான் வழக்கு தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. 1.56 ½ ஏக்கருக்கு எழுதிவைத்த

செட்டில்மெண்ட் பத்திரத்தை சாதாமாக்கி இந்த பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க வேண்டி பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் எனக்கு மேற்படி வழக்கு சொத்தில் எந்தவிதமான உரிமைமூலமோ இல்லை எனவே வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.

---